# இரட்சணிய யாத்திரிகம்

- எச்.ஏ.கிருட்டிணனார்

**முன்னுரை :**

நிறைய அன்பு, குறையாத ஆர்வம், தொடரும் நிகழ்ச்சி, தொண்டில் மகிழ்ச்சி என்பன மனித இயல்புகள் .அம்மனிதமே அனைத்துச் சமயங்களின் அடிப்படைக் கொள்கை. இக்கொள்கையைப் பேச்சாலும், வாழ்வாலும் வதை பல பட்டும் வெளிப்படுத்தியவர், இயேசு பெருமானார்.

**ஆசிரியர் குறிப்பு :**

இரட்சணிய யாத்திரிகம் நூலாசிரியர் எச்.ஏ. கிருட்டினனார் , திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கரையிருப்பு என்னும் ஊரில் 1827 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் நாள் பிறந்தார் . இவருடைய தந்தை சங்கரநாராயணர் பெரும் புலவராக விளங்கினார். அன்னையார் பெயர் தெய்வநாயகி அம்மாள் .இவர்கள் ரெட்டியார் பெட்டியில்வாழ்ந்தவர்கள்.கிருட்டினனார்தந்தையிடம் தமிழ் இலக்கியங்களையும், மாணிக்கவாசகத் தேவரிடம் இலக்கணங்களையும், பிலவணச் சோதிடரிடம் வடமொழியையும் கற்றார். சாயர்புரம் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். இரட்சணிய சமய நிர்ணயம், இரட்சணிய மனோகரம், இரட்சணியக் குறள் என்னும் நூல்களையும் இயற்றினார் . கிறித்தவக் கம்பர் எனப் புகழ்ப்பெற்ற பெருங்கவிஞர். 1900 ஆம் ஆண்டு பிப்ரவரி 3 ஆம் நாள் இயற்கை எய்தினார்.

**நூற் குறிப்பு :**

இரட்சணிய யாத்திரிகம் என்பதன் பொருள் (உயிர் தன்னைக் காக்க வேண்டி) இறைவனை நோக்கிச் செல்லும் பயணம் என்பதாகும் . ஆன்ம ஈடேற்றத்தை விரும்புபவர் என்பதும் பொருந்தும் . ஜான்பன்யன் என்னும் புகழ்பெற்ற ஆங்கில நூல் ஆசிரியர் இயற்றிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ் என்னும் நூலைத் தழுவி ஹென்றி ஆல்பர்ட்டு கிருட்டிணனார் வழி நூலாகத் தமிழில் இரட்சணிய யாத்திரிகம் என்னும் பெயரில் இயற்றினார். இந்நூல் ஐந்து பருவங்களையும் 47 படலங்களையும் கொண்டது.

**இறைமகனின் எளிய நிலை :**

**பாடல் வரிகள் :**

**பாசம் என உன்னலிர் பிணித்தமை பகைத்த**
**நீசமனு மக்களை நினைந்து உருகும் அன்பின்**
**நேசம் எனும் வல்லி யதை நீக்க வசம் இன்றி**
**ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்**

**தெளிவுரை :**

இறைமகன் தன்னைப் பிறர் கயிற்றால் கட்டும் போது அதற்கு உடன்பட்டு நின்றார். அச்செயலானது,இயல்பாக மனிதர்களிடம் காணப்படுகிற சாதாரண அன்புச்செயல் என்று கருத வேண்டியதில்லை. தம்மீது பகை கொண்டு தனக்கு இழிவான செயல்களைச் செய்த இம்மனிதர்கள் தாங்கள் வாழும் காலம் முழுவதும் துன்பத்தில் இருப்பார்களோ என்று எண்ணி அவர்களுக்காக இரக்கப்படுகிற தன்மையே காரணம். அந்த அன்பு என்னும் உறுதியான கட்டிலிருந்து விடுபட முடியாமல் தான், எந்த உதவியும் பெற இயலாத ஓர் ஏழையைப் போல் அமைதியுடன் நின்றார் .இதை நீங்கள் எண்ணிப் பாருங்கள் .

**பாடல் வரிகள் :**

**பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி**
**ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற**
**வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்**
**நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி**

**தெளிவுரை :**

கொடியோர் ஒன்று கூடிக் கூறிய இகழ்ச்சி மொழி எனும் கொடிய தீக்கொள்ளியானது அருள் நிறைந்த இறை மகன் இதயத்தில் அழுந்தியது. அவர் மிக வேதனையடைந்து மனம் வெந்து புண்பட்டாரே அல்லாமல் , தம்மைத் துன்புறுத்துகிறவர்கள் மீது சினந்து வருந்தத்தக்க ஒரு மறு சொல்லும் கூறாமல் நின்றார். தாம் கருதி வந்த வேலை நிறைவேற்றுவதற்காக அவர் அமைதி காத்தார்.

**பாடல் வரிகள் :**

**எண்ணமிட்டவர் பொருந்தியு பிலாத்தேனும் இறைமுன்**
**அண்ணலைத் தனி நிறுவவும் ஆக்கினைத் தீர்ப்புப்**

**பண்ணவும் என நிண்ணயம் பண்ணினர் பகைகொண்டு**

**ஒண்ணுமோ வரும் கூவலுக்கு உததியை ஒடுக்க**

**தெளிவுரை:**

பெருந்தகையரான இறைமகனைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்டு போந்தி பிலாத்து என்னும் ஆளுநரின் முன் தனியாகக் கொண்டு போய் நிறுத்தினர். அவருக்குத் தண்டனை பெற்றுத் தரவும் உறுதியாக இருந்தனர். வற்றிய சிறிய கிணறு தனக்குள் கடலை அடக்கிக் கொள்ள முடியுமா ?முடியாது .

**ஆளுநர் விதித்த கொலைத் தண்டனையை நிறைவேற்ற இழுத்துச்சென்று துன்புறுத்துதல் :**

**பாடல் வரிகள் :**

**முன்னுடை களைந்து ஒரு முருக்கு அலர்ந்தெனச்**

**செந்நிற அங்கிமேல் திகழச் சேர்த்தினர்**

**கொல் நுனை அழுந்தி வெம்குருதி பீறிடப்**

**பின்னிய முள்முடி சிரத்து பெய்தனர்**

**தெளிவுரை :**

இறை மகனை இழுத்துச் சென்ற அக் கொடியவர்கள் அவர் அணிந்திருந்த வெள்ளாடையைக் கழற்றி விட்டு, முருக்க மலர் போன்று சிவந்த ஓர் அங்கியை அவருக்குப் பொருத்தினர். துன்பம் தரும் கூர்மையான முள் செடியினால் பின்னப்பட்ட ஒரு முடியை அவருடைய தலையில் வைத்து இரத்தம் பீறிட்டு ஒழுகுமளவு அழுத்தினர்.

**பாடல் வரிகள் :**

**கைதுறுங் கோலினைக் கவர்ந்து கண்டகர்**

**வெய்துறத் தலைமிசை அடித்து வேதனை**

**செய்தனர் உமிழ்ந்தனர் திருமுகத்தினே**

**வைதனர் பழித்தனர் மறங்கொள் நீசரே**

**தெளிவுரை :**

கொடுமனம் படைத்த அந்த முரடர்கள் இறைமகனுடைய கையிலிருந்த கோலினைப் பிடுங்கி எடுத்துக் கொண்டனர். முள்முடி சூட்டப்பட்ட அவர்

தலையின் மேல் வன்மையாக அடித்து வேதனை செய்தனர். மேலும் அவருடைய திருமுகத்தில் எச்சிலை உமிழ்ந்து திட்டிப் பழித்துக் கேலி செய்தனர் .

**பாடல் வரிகள் :**

**என்கொல் மேதினி கீண்டு வெடித்திலது என்பார்**
**என்கொல் வானம் இடிந்து விழுந்திலது என்பார்**
**என் கொல் வாரிதி நீர் சுவறாததும் என்பார்**
**என்கொலோ முடிவு இத்துணை தாழ்த்ததும் என்பார்**

**தெளிவுரை** :

மக்கள் இத்தனை கொடுமைகளுக்குப் பிறகும் இவ்வுலகம் பிளந்து வெடிக்கவில்லையே! இது என்னே! என்பர்; வானம் இடிந்து விழவில்லையே! இது என்னே !என்பர்; கடல் நீர் வற்றிப் போகவில்லையே! இது என்னே! என்பர்; மேலும் 'இந்த உலகம் இன்னும் அழியாமல் தாமதிப்பதும் ஏனோ' என்பர் .

**பாடல் வரிகள் :**

**பொல்லாத யூதர்களும் போர்ச் சேவகர் குழுவும்**
**வல்லானை எள்ளிப் புறக்கணித்து வாய் மதமாய்ச்**
**சொல்லாத நிந்தை மொழி சொல்லித்துணிந்தியற்றும்**
**பொல்லாங்கை யெல்லாம் நம் ஈசன் பொறுத்திருந்தார்**

**தெளிவுரை :**

பொல்லாத யூதர்களும் போர்ச் சேவகர் கூட்டமும் எல்லாம் வல்ல இறைமகனை இகழ்ந்து பேசியும் வாயில் வந்தபடி சொல்லத் தகாத பழமொழிகளைக் கூறினர். அவர்கள் செய்த பொல்லாங்குகளை எல்லாம் நம் இறைமகன், பொறுத்திருந்தார்.